**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.301/2017**

Date: 19.03.2025

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1, A2 Present.**

**1வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை – PW-9- மாணிக்கம்**

நான் காவல்நிலையம் சென்றபோது அ.சா.7 மற்றும் அவரது கணவர் காவல்நிலையத்தில் இருந்தார்களா என்றால் இல்லை. நாங்கள் சென்றபின்பு தான் அவர்கள் காவல்நிலையம் வந்தார்கள். அவர்கள் வரும்போது அவர்களை போலிசார் தான் அழைத்து வந்தார்கள். சுமார் 1 மணிநேரத்தில் 1வது எதிரியையும், அவரது மனைவியும் காவல்நிலையத்திற்கு போலிசார் அழைத்து வந்துவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. என்னை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள்.

ஏற்காடு காவல்நிலையத்திலிருந்து என்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். இறந்துபோன குப்புசாமியின் பிரேதம் ஏற்காடு காவல்நிலையத்திற்கு எடுத்துவரப்பட்டு அதன்பின்பு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ஆம்புலன் உடன் தனிவாகனத்தில் அ.சா.7 தீபாவும் அவரது கணவரும் வந்தார்கள். ஆம்புலன்சுடன் போலிசாரும் வந்தார்கள். புகார் தரும்வரை நான் காவல் நிலையத்திற்கு வெளியில் நின்றிருந்தேன். காவல்நிலையத்தில் வைத்து காவலர்கள் முன்பு தான் புகார் எழுதப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,

III ADJ, Salem.